**செய்தி வெளியீடு எண்: 803** **நாள்: 27.11.2017**

**செய்தி வெளியீடு**

**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி–IV தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் இயங்கும் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், போட்டித் தேர்வு மூலம் அரசு பணி பெற விரும்பும் இளைஞர்களுக்கு அப்போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக '**தன்னார்வ பயிலும் வட்டம்**' இயங்கி வருகிறது.

இத்தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலம் பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக UPSC, TNPSC, CSAT, IBPS ஆகிய போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வகுப்பில் வாரம் ஒருமுறை தேர்வு மற்றும் பயிற்சி இறுதியில் மாதிரி தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

தற்போது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 14.11.2017–அன்று வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–4 (தொகுதி–IV) பணிகளில் அடங்கிய 9,351 காலிபணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான எழுத்துத்தேர்வு 11.02.2018–அன்று நடைபெற உள்ளது. இத்தேர்வுக்கு இணைய வழிமூலம் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்– 13.12.2017 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு–4 (தொகுதி IV) தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நடைபெற உள்ளதால், இத்தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள நபர்களில், இப்பயிற்சியில் பங்கு கொள்ள விரும்புவோர் மற்றும் குறிப்பாக அரசு வேலைவாய்ப்பிற்கென தனி இடஒதுக்கீடு உள்ள ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர் தொடர்புடைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி இக்கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**